1970 மார்ச் 2)

அடுத்து, விதி 41-ன் கீழ் டாக்டர் ஹாண்டே அவர்கள் உணவு-வணிக வரி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(4) கவன ஈர்ப்பு

தஞ்சை மாவட்ட விவசாயிகள் லெவி நெல்லை அரசுக் கிடங்குக்கு கொண்டு செல்ல போதிய போக்குவரத்து இன்மை

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Commercial Taxes, to a matter of urgent public importance, namely, the hardship experienced by the agriculturists in Thanjavur in transporting their 50 per cent levy paddy to the Government Godowns, due to lack of proper transport and the need to make necessary arrangements to collect the levy paddy from the field itself.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் தம் கவன ஈர்ப்பு அறிக்கையில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 50 சதவீத லெவி நெல்லை அரசு கிடங்குக்கு கொண்டு செல்ல போதிய போக்குவரத்து இல்லாமையால், விவசாயிகளுக்கு இடர்பாடான நிலை ஏற்பட்டுள்ளதென்றும், அதனல் மேற்படி நெல்லை தலத்திலேயே, வாங்கிக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். உணவுப் பொருள் கட்டுப்பாடு நீக்கத்திற்கு பிறகு, கொண்டுவரப்பட்டுள்ள புது கொள்முதல் முறைப்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 50 சத லெவி அரசிற்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆதலால், அவர்களுக்கு தலத்திலிருந்து லெவி நெல்லை அரசு கிடங்குகளுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவேண்டிய அவசியமில்லை.

ஐம்பது சத லெவி முறை தஞ்சாவூரிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு மொத்த வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்குத்தான் விதிக்கப்படுகிறது. இந்த 50 சதவீத லெவி, தஞ்சையிலிருந்து எடுத்துச் செல்லும் மொத்த வியாபாரிகளின்மேல் விதிக்கப்படும். ஆகவே, இந்த மொத்த வியாபாரிகளுக்கு 50 சதவீத லெவி கொடுப்பதில் எந்தவித சிரமமும் இராது. இருந்தபோதிலும் மொத்த வியாபாரிகள், லெவி நெல்லை அதிக தூரம் எடுத்துச் செல்ல வேண்டிவரும் சூழ்நிலையை தடுக்க இந்திய உணவு கார்ப்பரேஷன் 130 இடங்களில் சேகரிக்கும் இடங்களை ((Collection Depots) ஏற்படுத்தி இருக்கிறது. மேலும், மொத்த வியாபாரிகள் வட்டார வினியோக அதிகாரிகளிடமோ சர்க்கார் கிடங்கிலோ அல்லது நெல் அரைக்கும் நிலையங்களிலோ, லெவி நெல்லைக் கொடுக்கலாம். மேற்கொண்ட ஏற்பாட்டினல், மொத்த வியாபாரிகள் 10 மைலுக்கு மேல், தங்கள் செலவில் லெவி நெல்லை எடுத்துச்செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. அப்படி, 10 மைலுக்கு மேல் எடுத்துச் செல்லும் மொத்த வியாபாரிகளுக்கு அரசாங்கம் வண்டிச் சத்தத்தை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கொள்முதல் விலைக்கே அரசுக்கு விற்க முன்வரும் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்க T.C.M.F. நிறுவனத்தின் 500 கிராமக் கிளை அமைப்புகள் மூலமாகவும் F.C.I. நிறுவனத்தின் 35 சேகரிப்பு நிலையங்கள், 135 அங்கீகாரம் பெற்ற உரிமைதார் நிலையங்கள், ஆகியவற்றின் மூலமாகவும், தாலுகா சப்ளை அதிகாரிகள் மூலமாகவும், சிவில் சப்ளை இலாகாவின் அங்கீகாரம் பெற்ற ஆலைக்காரர்கள் மூலமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, நெல்லைக் குறைவான விலைக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தம் வருமென்றோ, வாங்குவோரின்றி நெல் தேங்கி விடுமென்றோ, அஞ்சத் தேவையில்லை.

Dr. H. V. HANDE : At present procurement is taking place in district of Thanjavur. Supposing a person has got five acres and he does not come under 'wholesale big land lord.' Suppose he wants to transport his paddy. Will the Government make some arrangement? I think from the answer given by the Hon. Minister there has been change in the programme, and that the system has improved after I put the question.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகள் மட்டும்தான் கொள்முதலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று நினைப்பது சரியல்ல. தஞ்சை மாவட்ட விவசாயிகளும் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. தாங்களே எடுத்துக்கொண்டு செல்லலாம். வியாபாரிகள் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கிறபோதுதான் 50 சதவீதம் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும் அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டிலும் எவ்வித இடைஞ்சலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக, திரு. மா. இராசாங்கம் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு விதி 41-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர் தம் இடத்தில் இல்லை.

அடுத்து நிதிநிலை அறிக்கை விவாதத்தில் திரு. காசிராமன் அவர்கள் தம் பேச்சைத் தொடர்வார்கள்.

(5) 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொதுவிவாதம்—தொடர்ச்சி

■ **திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, சென்ற சனிக்கிழமை அன்று பேசும்போது தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஒருபுறம் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது, வரிச்சுமையும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினேன். அவர்களிடம் இருந்து அதிகமான வரிகள் வாங்கும்போது பதிலுக்கு வேளாண்மைத்துறையில் அவர்களுக்கு அதிகமான சௌகர்யங்களாவது செய்து கொடுக்கப்